# ‘அளம்’ காட்டும் பெண்ணியம்

***செ. அனிதா***
***ஆய்வியல் நிறைஞர், தமிழ்த்துறை***
***சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி***
***ஒட்டன்சத்திரம்***

**முன்னுரை**

படைப்பாளன் தங்களின் படைப்புகளை வெறும் எழுத்துக்களாக படைப்பது இல்லை. மாறாக அவை மனித வாழ்க்கையைத் திருத்தி அமைத்து பண்பாட்டை உருவாக்கும் நோக்கத்தில் படைக்கின்றான். ‘அளம்’ என்னும் நாவலில் இடம்பெற்ற மகளிரின் நிலை பற்றியும், கணவன் தன்னை விட்டுச்சென்ற பின்னரும் தனியாக நின்று கூலி வேலை செய்து அளத்தை சொந்தமாக்கி கொள்ளும் சுந்தராம்பாளின் கடின உழைப்பும், தன் மகள்களின் வாழ்க்கை நிலையைப் பெண்ணிய நோக்கில் ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது,

**பெண்ணியம்**

பெண்ணியம் என்பது பெண்களின் வாழ்க்கைநிலை, அவர்களுக்கான விழிப்புணர்வு, முன்னேற்றச் செயல்பாடுகள், அதில் ஏற்படும் தடைக்கற்களை களையும் முனைப்புகள் அனைத்தையும் உள்ளடக்கியதாகும்.

பெண்ணியம் (Feminist) என்ற வார்த்தையானது மிகவும் அண்மைக்காலத்தில் தான் தோன்றி வளர்ந்து வருகின்றது. இது பெண்களின் உரிமைக்காகப் போராடும் ஒரு புதிய இயக்கமாகும். அத்தோடு பெண்ணின் தனிப்பட்ட குடும்ப வாழ்க்கையிலும், சமுதாய அரசியல் பொருளாதாரச் சூழ்நிலையிலும், அவள் ஆண்களுக்குச் சமமானவள் என்னும் உயர்நெறியை நிலைநிறுத்திக் காட்டும் நோக்கத்தைக் கருவாகக் கொண்டு இயங்குகிறது.

பெண்கள் சமூகத்தில் தங்களுக்கென நிலையான இடத்தினைப் பெறுவதற்கு துணைசெய்வது இவ்வியக்கம் ஆகும். ஆண்களுக்கு நிகராகத் தரணியில் மாதரும் சாதனைகள் புரிந்திட, அதற்காக ஏற்பட்ட தோல்விகளையே வெற்றிப்படியாக மாற்றி வாழ்வில் உன்னதநிலை பெறலாமென்ற உத்வேகத்தைக் கொடுப்பது பெண்ணியம்.

**‘அளம்’ காட்டும் பெண்ணியம்**

அளம்நாவலின் வழியாக சு.தமிழ்ச்செல்வி பெண்களின் நிலையை அணு அணுவாகச் சுட்டிக்காட்டியள்ளார், கணவன் இல்லாத சுந்தராம்பாள் மூன்று பெண் பிள்ளைகளை வைத்துக் கொண்டு மிகவும் சிரமப்படுகிறாள். அப்பெண் சொந்தமாக அளத்தை வாங்கி வேலை செய்யும் பெண்முன்னேற்றம் இந் நாவலில்பதிவு செய்யப்பட்டுள்ளது. தனி மனுஷியாக ஒருபெண் குடும்பத்தில் வரும் துன்பங்களை எவ்வாறு எதிர்கொள்கிறாள் என்பதை இந்நாவல் காட்சிப்படுத்துகின்றது.

**கணவன் மனைவி உறவு**

இந்நாவலில் சுந்தராம்பாள் தன் கணவன் எந்த வேலையும் செய்யாமல் வெட்டியாய் இருந்த போதும் அவன் கப்பலுக்கு வேலைக்குப் போவதை நினைத்தும் வருத்தப்பட்டாள். கணவனதன்னையும் தன் குழந்தைகளையும் விட்டுச் சென்றிருந்த போது என் குழந்தைகள் மூவரும் பெரியமனுஷியாகிவிட்டார்கள். ஆனாலும் அவன் இதுவரை வரவே இல்லை என புலம்புகின்றாள்.
குடும்பம் என்றலே பொதுவாக கணவன் மனைவி உறவுநிலை மிகவும் நெருக்கமானதாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. இருவரும் ஒருவருக்கொருவர் மிகுந்த அன்பும், பாசமும் அரவணைப்பும் கொண்டு குடும்பத்தில் வாழ வேண்டுமென்பதை

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது**

என்ற திருவள்ளுவரின் கூற்றுப்படி கணவனும் மனைவியும் அன்பும் அறனும் பெற்று வாழ வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

சுந்தராம்பாள் தன் கணவன் தன்னைவிட்டுப் போனபின்பும் தன் கணவன் என்றாவது ஒருநாள் வந்து விடுவான் என்ற நம்பிக்கையுடன் நினைத்துக் கொண்டும், தன் ஊரில் புயல் வந்து வீடுகளை எல்லாம் அடித்துக் கொண்டு போகும் நிலையிலும் கூட சுந்தரம்பாள் தன் சொந்த ஊரைவிட்டு புலம் பெயராமல் இருந்தாள்.

**வடிவாம்பாள் பொன்னையன் உறவு**

வடிவாம்பாளும் பொன்னையுனும் ஒருவருக்கொருவர் அன்பாகவும், பாசமாகவும் இருந்தார்கள். பொன்னையன் அடியெடுத்து வைத்த நேரமோ என்னவோ அவன் அடுத்த தங்கைக்கு சில நாட்களில் (ராசம்பாளுக்கும்) அகஸ்தியம்பள்ளியிலிருந்து சம்பந்தம் வந்தது. பொன்னையன் வயது அதிகமாக இருந்ததனால் வடிவாம்பாள் வருத்தத்துடன் இருந்தாள். அதை ராசம்பாளிடம் கூறினாள். அப்போதும் கூட வயசானவராக இருந்தாலும் பரவாயில்லை. “இஞ்சயிருந்து நாஞ் செருமப்படுறத்த விட அங்க போயி நல்லாருக்கத்தாம் போறங், அங்க பெயிட்டாக்க மொதல்ல இந்த அளத்து வேலக்கி போவாம இருக்கலாமுள்ள அதாம் பெரிய சந்தோஷம்’ என்றாள். ஆதனூர் மீனாட்சி ஆத்தா சின்ன வயசில நம்மளுக்கு ஒருபாட்டுச் சொல்லுமே ஒனக்கு நெனப்புருக்கா.

**கீழத்தெருவுலயே நா கெழவனுக்கு வாக்கப்பட்டேன்**
**வாக்கப்பட்ட முணாம்நாளு பாக்குதிங்க பல்லு இல்லை**
**ஆடு வளத்தாரடி தாத்தா, அட்டியபண்ணி போட்டாரடி**
**மாடு வளர்த்தாரடி தாத்தா, மாட்டல் பண்ணி போட்டாரடி**
**கோழி வளர்த்தாரடி தாத்தா, கொலுசு பண்ணி**
**போட்டாரடி எல்லாம் பண்ணி போட்ட - தாத்தா முடிஞ்சிதடி**
**மாட்டல கயட்டுங்கடி தாத்தா மண்டையோரம் - வச்சளுவ**
**அட்டியல கயட்டுங்கடி தாத்தா அடிமடியே - வச்சளுவ**
**கொலுசு கயட்டுங்கடி தாத்தா கொடங்கயோரம் வச்சளுவ**

இவ்வாறு வடிவாம்பாள் அழுதுகொண்டே தன் தங்கை ராசம்மாளிடம் கூறினாள்.

**வறுமையிலும் விருந்து**

சுந்தராம்பாளின் கணவன் தன்னை விட்டுச்சென்ற பின்னரும், கொஞ்சமும் முகம் சுளிக்காமல் நடந்து கொண்டிருந்தாள். அவள் வறுமையில் இருந்த போதும் சுந்தராம்பாளின் அத்தை ஆதனூர் மீனாட்சி வந்தாள். அவளையும் மனம் நோகும்படி இல்லாமல் நன்றாக பார்த்துக் கொண்டிருந்தாள். அவ்வாறு அவா;கள் வறுமையில் இருந்தனர். அப்போது கேட்ப்பாரற்றுக் கிடக்கும் கோரைக் கிழங்குகளும், தொம்பட்டிப் பழங்களையும் தின்றனர். தாம் வறுமையில் இருந்தாலும் பிறருக்குக் காட்டிக் கொள்ளாத செம்மாந்த நிலை மகளிடம் இருந்துள்ளது. இந்நாவலில் குறிப்பிட்டுள்ள செய்தியினைப் பண்டை இலக்கியத்தில்,

**குப்பை வேளை உப்பிலி வெந்ததை**
**மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து**
**இரும்பேர் ஒக்கலோடு ஒருங்குடன் மிசையும்** **(சிறுபாணற்றுப்படை - 137, 139)**

ஏன பாடலடியில் பாணர்களின் வறுமை நிலையினை சிறுபாணாற்றுப்படையின் வழி பதிவு செய்துள்ளார். தன் கணவன் விட்டுச்சென்ற பின்னரும் ஒரு பெண் இவ்வாறான வறுமையில் வாழ்கின்றாள்.வறுமை வாட்டிவதைக்கும் அவர்களுக்கு வாழ்வின் நாட்களைக் கடப்பதே சற்று சிரமமாக இருக்கின்றது.

**தந்தை இல்லாக் குடும்பத்தின் நிலை**

சுந்தராம்பாளின் கணவன் வேலைக்காகச் சிங்கப்பூர் சென்றவன் திரும்பிவரவில்லை. அதனால் அவளது குடும்பம் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. தன் கணவனுக்கு ஏதேனும் நடந்து விட்டதோ என்று சுந்தராம்பாள் புலம்ப ஆரம்பித்தாள்.

**சிட்டுக்குருவியளா... செமலோரத்து பச்சியளா...**
**சீமக்கி போனியளா? செவந்தகனி தின்னியளா?**
**பசி எறக்கம் கொண்டியளா?**
**யாம் பழிகார பாவிய பாத்தியளா...?**

என்று கண்ணீரையும், மூக்கிலிருந்து வடிந்த தண்ணீரையும் முந்தானையால் துடைத்துக் கொண்டாள் சுந்தராம்பாள். ஒரு பெண்ணிற்கு அவளுடைய தந்தை இருந்திருந்தால் அப்பெண்ணிற்குத் திருமண வயது வந்தவுடனையே திருமணத்தைச் செய்து வைத்திருப்பார். வடிவாம்பாள் கருப்பாக இருந்ததால் அவளுக்கு திருமணம் நடக்கவே இல்லை. இவ்வாறாக ஒரு குடும்பம் ஆணை மட்டுமே சார்ந்ததாக உள்ளது.

**நந்தனா வருடபுயல்**

வைகாசிக்காற்று ஓவென்று அடித்துக் கொண்டிருந்தது. நந்தனா வருட புயலுக்குப் பிறகு சனங்கள் பெரும்பாலும் உப்புக் கம்பெனிகளை நம்பியே வாழத்தொடங்கினர். மழை அதிகமாக பேய ஆரம்பித்ததனால் பாலத்தைக் கடந்து சென்றனர். இந்தப் புயலாலும் கடல் கொந்தளிப்பாலும் அதிகமாய் பாதிக்கப்பட்டது, ஆர்காட்டுத்துறைதான். இங்கு வசிப்பவர்கள் எல்லாருமே 'மீனவர்' சனங்கள் தான். கடலையே நம்பி வாழும் அவர்களை கடல் அப்படி அழித்திருக்கக்கூடாது. வெள்ளம் வடிந்து பார்த்தபோது ஏராளமான உடல்கள் மின்கம்பங்களில் சிக்கித் தொங்கிக் கொண்டிருந்தன. அவ்வளவு புயல் மழை, காற்று அடித்தாலும் சுந்தராம்பாள் தன் பிள்ளைகளின் நலன் கருதி அவ்வூரிலே இருந்து தன் நம்பிக்கையை நிலைநிறுத்தினாள். இதில்சுந்தராம்பாளின் தன்நிலை மேம்பாட்டினை அறிந்துகொள்ள முடிகின்றது.

**உப்பளப் பிரச்சினை**

உப்பளத்தில் கிணறு தோண்டும் வேலை நடந்தது. உப்பளத்தில் மண்வெட்டி போட்டு வெட்டிகளி அல்ல முடியாது. கிணறு தோண்டும் போது கீழே வெறும் கருங்களியாக இருக்கும். கருங்களியை கையாலேயே தோண்டியெடுக்க வேண்டும். தோண்டியெடுக்கும் கருங்களியை நீண்டதூரம் நடந்துபோய் பாத்திகளின் தலைப்பகுதி போலியிருக்கும் தட்டிமேட்டில் போட்டுவிட்டு வரவேண்டும். கருங்களி தூக்குவதற்கு கனமாகவும் இருக்கும்.

கடும்வெயில் இருந்தாலும் கூட அந்த கருங்காளியை தூக்கிக் கொண்டு செல்ல வேண்டும். இல்லையென்றால் கங்காணியாக இருப்பவர் திட்டுவார். முதலாளிகளினால் பெண்களுக்கு பாலியல் தொந்தரவும் அதிகமாக ஏற்படும். உப்பளத்தில் வேலை செய்வதால் பெண்களுக்கு நிறைய பாதிப்புகள் ஏற்படும்.

**குழந்தைத் தொழிலாளர்களின் நிலை**

இந்த வேலைக்கு பெரிய ஆட்களைவிட்டால் கூலி கொடுத்து கட்டுபடியாகாதென்று சிறிய, பிள்ளைகளைக் கூப்பிட்டிருந்தார்கள். கருங்களியைத் தோண்டி ஒவ்வொரு கொட்டாய் சிறுவர்களின் தலையில் தூக்கி விடுவார்கள். சிறுவர்கள் நீண்டதூரம் நடந்து போய் தட்டிமேட்டில் போட்டுவிட்டு வருவார்கள். சிற்றெறும்புகள் போல் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருப்பார்கள் சிறுவர்கள். தட்டிமேட்டில் கையில் ஓலையை வைத்துக்கொண்டு கங்காணிநிற்பார். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஓலை. ஒரு நடை கொண்டு வந்துவிட்டால் ஒரு கோடு போட்டுக் கொள்வார் கங்காணி, புல் நுனியில் மலரும் தட்டான் பூச்சிகளைப்பிடித்து விளையாடவேண்டிய குழந்தைப்பருவத்தில் கண்ணீர் வெள்ளத்திலிருந்து கரையேற துடிக்கின்ற பரிதாபமான குழந்தை தொழிலாளர் நிலையை அப்துல்ரகுமான் எடுத்துரைக்கின்றார். கண்ணாமூச்சி ஆட வேண்டிய விளையாட்டுப் பருவத்தில் இவர்களுக்கு வாழ்க்கையே கண்ணாமூச்சி ஆகிவிட்டது.

**வருடம் தவறாமல்**
**குழந்தைகள் தினத்தைக்**
**கொண்டாடுகிறவர்களை**
**தினங்களை கொண்டாடுவதை**
**விட்டுவிட்டு**
**குழந்தைகளை எப்போது**
**கொண்டாடப்போகிறார்கள்.**

என்ற கவிதை வரிகளில் குழந்தைகள் மீது அவர்கொண்ட நேயத்தைத் தரிசிக்க முடிகிறது.

**பெண்ணின் கைம்மை நிலை**

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளில் 'கைம்மைத்துயர்' ஆழமாக வேரூன்றிய சமுகத்தீமையாகும். கணவனை இழந்த பெண் செல்லாத காசாக பல்வேறு துயரங்களுக்கும் ஆளாகி, வேண்டாத பொருளாகச் சமுதாயத்தில் மதிக்கப்படுகின்றனர். வடிவாம்பாளின் கணவன் இறந்த பின்னர் அவள் எங்கும் செல்லாமல் வீட்டிலேயே இருந்தாள். குளத்தில் குளிப்பதற்குக் கூட யாரும் இல்லாத நேரத்தில் பார்த்து போய்விட்டு வந்துவிடுவாள். மணநாள் முடிந்த மூன்றாம் மாதமே மணவாளண் இழந்திட்ட மங்கைக்கு ஏற்பட்ட கொடுமையை

**தாலி கழுத்திலிட்டார் சவத்தையொரு கட்டிலிட்டார்**

என சுடைலைமுத்துப்பிள்ளை தன்பாடல் வரிகளில் கைம்மை நிலையைப் பற்றி குறிப்பிடுகிறார்

**பெண் மறுமணம்**

கணவனை இழந்த பெண்களுக்குச் சமுதாயத்தில் இரண்டாவது திருமணம் செய்து வைப்பார்கள். இதைத்தான் பெண்மறுமணம் என்று கூறுவர். மறு விவாகம் செய்யும் பெண்ணிற்கு மறுமணம் செய்து வைக்கும்போது நோயாளிகளையோ அல்லது வயதானவர்களையோ அல்லது மனைவியை இழந்தவர்களையோ திருமணம் செய்து வைக்கின்றனர்.

ஏற்றத்தாழ்வற்ற பிறப்பினில் பெண் மனித மதிப்புப்பெறாமல் ஆண்மகனால் உடமைப் பொருளாகக் கருதப்படுவதைக் குறித்து

**தட்டுமுட்டு சாமான்போல்**

**முட்டாள் நனமகலவேண்டும்.** எனப்பாடுகிறார் கவிஞர் ஜீவா

பெண்ணுக்கு மறுமணம் என்பதனைச் செவியில் தீயைப்பாய்ச்சியது போல் எண்ணினர். ஆண் தனது மனைவியை இழந்துவிட்டால். அவனுக்கு மறுமணம் என்பது இயல்பானதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால் பெண் மூன்று வயதில் விதவையானால் கூட அவா;களுக்கு வாழ்க்கை என்பது ஒரு வழிப்பாதையாக அமைந்துவிடுகிறது.

வடிவாம்பாளுக்கு வயதான பொன்னையனைத் திருமணம் செய்து வைத்தனா;. சிறுவயதானப் பெண்ணிற்கு.

**பாழும் கிழவனுக்கு பத்துவயது சிறுபாலகியை**

**மாலையிடும் பான்மை ஒழிப்போம் -** என்று நாராயணன் என்னும் கவிஞர் பாடுகிறார்

**மனவேதனை**

பெண்ணாய் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மனவேதனை இருக்கும். அவை குடும்பத்தைப் பற்றியும் வேதனை, பிள்ளைகளைப் பற்றியும், எதிர்காலத்தைப் பற்றியதாகும். இந்நாவலில் வடிவாம்பாள் தனக்குத் திருமணம் ஆகவில்லையே என்று கவலைப்பட்டாள். அதற்கு காரணமான கருமைநிறத்தை வெறுத்தாள்.

வடிவாம்பாளுக்கு தோசம் இருந்தது. அதை முதலில் கழிக்கவேண்டும். இல்லையென்றால் தன் மனம் இன்னும் வேதனையுறும் என நினைத்தாள் சுந்தராம்பாள். சோறு தின்னக்கூட அவளுக்கு மனம் போகவில்லை. முதிர்கன்னியான நிலையிலும் தன் மகள் திருமணம் செய்து கொள்ளாமல் இருப்பதை நினைத்து சுந்தராம்பாள் மனவேதனை அடைந்தாள்.

**பெண்ணின் பெருமை**

பெண்ணுலகு, ஆணுலகு என்னும் இரண்டனுள் உயர்வு தாழ்வு கருதலாகாதென்று சொல்லப்பட்டது. இரண்டுலகினுள் உயர்வு தாழ்வு இல்லையெனினும் பெண்ணுலகிற்கு முதன்மை வழங்க வேண்டுமென்றும், அறிவும், அன்பும் வாய்த்தோரின் கருத்தாகின்றது. பெண்ணைத் தெய்வமாகப் போற்றுகின்ற சமுதாயத்தில் பெண்பிறப்பு ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. காலங்காலமாக ஆண்குழந்தை போற்றப்படுவதைப் போல் பெண் குழந்தை போற்றப்படுவதில்லை என்பது இலக்கியங்கள் பிரதிபலிக்கும் கணிப்பு. இதனைத் தகா;க்கும் வகையில்,

**பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா**
**பெண்மை வெல்கவென்ற கூத்திடுவோமடா**

என்று பாரதியும்

**மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல**
**மாதவஞ் செய்திடல் வேண்டும் அம்மா** - என்று கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை கூறுகிறார்

அத்தகைய பெருமைமிக்க பெண்ணாக சுந்தராம்பாள் திகழ்கிறாள். தன் கணவன் கடைசிவரை எந்த ஒரு தகவலும் சென்ற இடத்திலிருந்து கடைசிவரை வரவில்லை. தன்னுடைய கணவன் இல்லாத சூழ்நிலையிலும் பல வேலைகளைச் செய்து தன் குடும்பத்தைத் தன்னால் முடிந்தவரை யாரிடமும் உதவி கேட்டு பிறர் தயவில் வாழாமல் தன்முயற்சியால் தன்னை மேம்படுத்திக் கொண்டனர்.

வடிவாம்பாளின் கணவன் இரண்டு பேரும் இறந்த நிலையிலும் கூட வீட்டிற்குள் முடங்கிக் கிடக்காமல் அளத்தைச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என நினைக்கின்றாள். தன்னுடைய பெரியப்பாவின் உதவியால் தனக்குச் சேரவேண்டிய நிலத்தை விற்று அந்த பணத்தில் ல் அளத்தை வாங்குகின்றனர்.

பெண்மீது திணிக்கப்பட்டுள்ள மரபுக்கருத்தாக்கங்கள் பெண்ணை உயர்த்துகின்றன. அதே வேளையில் பெண் தன்னிச்சையாக தனித்துவத்துடன் இயங்குவதற்கு தடைகல்லாகி பல்வேறு இன்னல்களுக்கு ஆளாக்கப்படுகின்றனர். சமுதாயம் தன் மீது ஏற்றியுள்ள மரபு மதிப்பீடுகளைக் காக்கப் பெண், பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு தன் சுயவிருப்பு வெறுப்புகளை உள்மறைத்து சமுதாயத்தில் ‘‘தெய்வமாக” (கல்லாக) உலா வரவேண்டியுள்ளது.

வடிவாம்பாளும் தன் திருமணம் செய்யும் ஆண் வயதானவர் என்று தன் மனதிற்குள் நினைத்து வருந்தினாள். ஆனால் தன் கணவன் இவ்வாறெல்லாம் இருக்கவேண்டும் என நினைத்திருந்தால் அவளுடைய சுயநலமாக இருந்திருக்கும், ஆனால் அவள் தன் அம்மாவிற்காக பொன்னையனையேத் திருமணம் செய்து கொண்டாள்.

**முடிவுரை**

தொடக்ககாலப் புதினங்களின் வழி பெண்களைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை எனினும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளையும், மறுக்கப்பட்ட கல்விகளையும் புரிந்துகொள்ளவில்லை. ஆனால், இருபதாம் நூற்றாண்டுப் புதினங்கள் பெண்கள் வாழ்க்கையின் பிரதிபலிப்புகள் எனலாம். தங்கள் மனங்களிலும், வாழ்க்கையிலும் பெண் வைத்திருக்கும் இருள் முடிச்சுகளை வெளிச்சத்திற்கு கொண்டு வருகையில் அவ்வகையில் பெண்களின் வாழ்க்கை வெளி உலகிற்கு படம்பிடித்துக் காட்டுபவர்களின் சு.தமிழ்செல்வி குறிப்பிடத்தக்கவராயத் திகழ்கிறார். ‘‘அளம் நாவலின் கலைச்சூழல் தெரியாவிட்டாலும் சமுதாயத்திற்குக் கட்டுப்பட்டே வாழ்கின்றனர். பெண்ணியம் என்பன பெண்களின் வாழ்நிலை, அவர்களுக்கு விழிப்புணர்வு இல்லாமை, முன்னேற்றச் செயல்பாடுகள் அதில் ஏற்படும் தடைகள் மற்றும் முனைப்புகள் அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது. ஆண் பெண் இருவருக்கும் தம்முள் அன்புகொண்டு வாழ்வது காதல் ஆகும். காதலுக்கு உட்படுபவர்கள் காட்சிப்படுத்தப்படுத்தப்படுகின்றனர். அதிகம் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே தான்.” இச்சமுதாயத்திலுள்ள பெண்ணின் பிறப்பு, வளர்ப்பு, வாழ்க்கை, இறப்பு என்று அனைத்தும் ஓர் ஆணை மையமிட்டேச் சார்ந்து உள்ளது. அளம் என்ற நாவலின் பெரும்பகுதி ஒரு குடும்பத்தைச் சுற்றியே நிகழ்கிறது. அக்குடும்பத்தைச் சார்ந்தே பெண்களுக்கு அவர்களின் வாழ்வில் ஏற்படும் சிக்கல்களும் அவற்றிற்கான தீர்வும் பாத்திரத்தின் வாயிலாக உணர்த்துகின்றார். எவ்வாறெனில் பிறருடைய தயவையும் எதிர்பார்க்காமல் தங்களுடைய சொந்த காலிலே நின்று அளத்தை வாங்கி தங்களுடைய வாழ்க்கையை வெற்றிச் சிகரமாக அமைக்கின்றனர்.